இணைப்பு I.

[568-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 842-க்கான விடையைக் காண்க].

மத்திய அரசு இயற்ற உத்தேசித்திருக்கும் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர் மத்திய வரைவு திட்டம், 1980-ன் சிறப்பியல்புகள் பின்வருமாறு :—

(அ) விசையின் துணையுடன் வேலை செய்யும் 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அல்லது விசையின் துணையின்றி வேலை செய்யும் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கொண்ட கட்டிட வேலை/பொறியியல் கட்டுமான நிறுவனங்கள் இச்சட்டத்தில் அடங்கும்.

(ஆ) மத்திய மற்றும் மாநில அரசுகளின் அதிகார வரம்பினை வரையறுத்தலும் கட்டிட வேலை மற்றும் பொறியியல் கட்டுமானப் பணிகளை விளக்குதலும்.

(இ) பாதுகாப்பு மற்றும் காவல் போன்ற குறிப்பான காரணங்களுக்காக மேற்கூறிய சட்டத்தின் விதி முறைகளிலிருந்து விலக்களித்து அறிவிக்கைகள் (No fica ions) வெளியிடும் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட அரசுக்கு குறைந்த அளவில் அனுமதித்தல்.

(ஈ) கட்டிடம் மற்றும் பொறியியல் பணி நிறுவனங்களுக்கான பதிவு மற்றும் உரிமம் வழங்குதல் சம்பந்தப்பட்ட விதிமுறைகளை வகுக்க மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குதல்.

(உ) உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டத்தைச் செயல்படுத்துவது சம்பந்தமானவற்றில் மாநில அரசுக்கு அறிவுரை வழங்க கட்டிடம் மற்றும் பொறியியல் கட்டுமானப் பணியாளர்களின் மத்திய/மாநில ஆலோசனை வாரியங்களை அமைத்தல், இதன் அமைப்பு, குறிக்கோள், நோக்கம் போன்றவற்றை விதி முறைகளில் குறிப்பிடுதல்.

(ஊ) வயது வந்த தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை என்றும், ஒரு வாரத்திற்கு 48 மணி நேர வேலை என்றும், சிறு வயதினருக்கு ஒரு நாளைக்கு ½ மணி நேர ஓய்வுடன் கூடிய ஆறு மணி நேரம் வேலை என்றும் வேலை நேரத்தை வரையறுப்பது.

(எ) இடை நேர ஓய்வு, வாரவிடுமுறை, சாதாரண ஊதிய வீதத்தை விட இரண்டு மடங்கு அதிக ஊதியம் என்ற வீதத்தில் மிகை நேர ஊதியம், 20 நாட்கள் வேலைக்கு ஒரு நாள் என்ற வீதத்திலும், 15 நாட்கள் வேலைக்கு ஒரு நாள் என்ற வீதத்திலும்,

1981 ஏப்ரல் 22]

ஓர் ஆண்டில் 240 நாட்கள் வேலை செய்திருந்த வயதுவந்த தொழிலாளர்களுக்கும் / சிறு வயது தொழிலாளர்களுக்கும் முறையே ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்குதல்.

(எ) தேவையான ஆய்வு அலுவலர்களை நியமித்து அவர்களுடைய அதிகாரங்களை வரையறுத்தல்.

(ஐ) ஐந்நூறும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் வேலை செய்யும் நிறுவனங்களில் ஒரு பாதுகாப்பு அலுவலரையும் (Safety Officer) 250-ம் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் நிறுவனங்களில் ஒரு பாதுகாப்பு ஆய்வாளரையும் (Safety Inspector) ஏற்படுத்துதல்.

(ஒ) கட்டிடம் மற்றும் பொறியியல் கட்டுமானப் பணியாளர் பாதுகாப்பு மற்றும் கட்டுமானப் பணியாளர் நலன், பாதுகாப்பு சம்பந்தமான விதிமுறைகளை வகுக்கவும், ஆணைகள் பிறப்பிக்கவும் மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்குதல்.

(ஓ) விபத்துக்கள் ஏற்பட்டால் அவை பற்றி தகவல் கொடுப்பதை சட்டபூர்வமாக ஆக்கவும் இவ்விபத்துக்களுக்கான காரணங்கள் குறித்து விசாரணை செய்யவும் மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குதல்.

(ஔ) கட்டுமானப் பணியாளர்களுக்கு அவர்தம் நிறுவனத்தினர் ஈட்டுறுதி வசதி அளிக்கவும் விபத்துக்கள் நேரிடின் இழப்பீட்டுத் தொகை வழங்கவும் உறுதியளித்தல்.

(க) 15 வயதுக்குக் குறைவான குழந்தைகளை கட்டுமானப் பணிகளுக்கு அமர்த்துவதைத் தடுப்பது, பெண் தொழிலாளர்களுக்கு வேலை நேரத்தைக் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை என்று கட்டுப்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு மகப்பேற்றுக்கு முன்னும் பின்னும் ஆறு வார கால மகப்பேறு விடுமுறை அளிப்பது.

(கா) சட்டத்தினை, விதிகளை மீறுபவர்களுக்கு மூன்று மாத சிறைத் தண்டனையும் அல்லது ரூ. 2,000 வரை அபராதமும் விதித்தல், விதிமுறைகளை அவ்வாறு மீறுவது தொடர்ந்தால்

நாளொன்றுக்கு ரூ. 75 அபராதமும் விதித்தல். ஒரே குற்றத்தைத் தொடர்ந்து செய்தால் அதற்கு அதிகப்படி தண்டனையாக ஆறு மாத சிறைத் தண்டனையும் அல்லது ரூ. 4,000 அபராதமும் விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உயிர் இழப்பு அல்லது உடலூறு விளைவிக்கும் கடுமையான விபத்துக்களில் முறையே ரூ. 1,000, ரூ. 500 என்று அபராதமும் விதித்தல்.

(கி) தற்போது நடப்பில் இருக்கும் 1923-ஆம் ஆண்டின் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம், 1961-ஆம் ஆண்டு தாய்மை நலச் சட்டம், 1970-ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1976-ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம், மற்றும் 1979-ஆம் ஆண்டின் உள் மாநில குடியேறிய தொழிலாளர் (வேலை வாய்ப்பு மற்றும் பணி முறைகள் ஒழுங்கு படுத்தும் சட்டம்) [Interstate Migrant Workmen (Employment and Conditions Service) Act.] ஆகியவற்றில் உள்ள விதிமுறைகளைக் கட்டிடக் கட்டுமான தொழிலாளர்களுக்கும் பொருந்துமாறு செய்து இச்சட்டங்களின் பயனை அவர்களுக்கு விரிவுபடுத்துதல்.

இணைப்பு II.

[591-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 31.

கொள்கை விளக்கக் குறிப்பு (1981-82).

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன்" என்ற தலைப்பின் கீழ் 1981—82-ஆம் ஆண்டுக்குரிய மானியக் கோரிக்கை எண். 31-இல் ரூபாய் 24,95,13,000 நிதி ஒதுக்கம் செய்ய ஒப்புதல் அளிக்குமாறு இச்சட்டமன்றப் பேரவையினை வேண்டுகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS